# Official Spokesperson’s response to media queries on events related to Karakalpakstan in Uzbekistan

July 06, 2022

----------------------------------------------------------------------------------------------------

### உஸ்பெகிஸ்தானில் கரகல்பக்ஸ்தான் தொடர்பான சம்பவங்கள் குறித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளரின் பதில்

ஜூலை 06, 2022

உஸ்பெகிஸ்தானில் கரகல்பகஸ்தான் தொடர்பான சம்பவங்கள் குறித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு அரிந்தம் பக்ச்சி கூறியதாவது:

"கரகல்பகஸ்தானில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் உட்பட உஸ்பெகிஸ்தானில் மேற்கொள்ளவுள்ள அரசியலமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளையும் நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்,. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு எங்களின் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கவும், மேலும் பிரச்சனைகள் எழாமல் தடுக்கவும் உஸ்பெகிஸ்தான் அரசு எடுத்த நடவடிக்கைகளை நாங்கள் பார்த்தோம். உஸ்பெகிஸ்தானுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் நட்புணர்வு கொண்ட கூட்டாளர் என்ற முறையில், நிலைமைகள் விரைவில் சரியாகும் என்று நாங்கள் நம்புகிறோம்."

புதுடெல்லி
6 ஜூலை 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.